செய்திமடல் - இதழ் 12

மே 2023

இவ்விதழில், ROSA குழு காலாண்டு அடிப்படையில் தயாரிக்கும் ஆராய்ச்சிச் சுருக்கங்களை நாங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறோம். 'சிங்கப்பூர் லைஃப் பேனல்'® (SLP) உறுப்பினர்களுடனான சந்திப்பு அமர்வின் மூலம், உங்கள் பதில்கள் ஆராய்ச்சிக்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள உங்களுக்கு இருக்கும் விருப்பத்தை நாங்கள் அறிந்துகொள்கிறோம். எங்களின் ஆராய்ச்சிச் சுருக்கங்களை இவ்வாறு உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம், இந்தக் கருத்தாய்வுகளின் நோக்கத்தையும், ஒவ்வொரு மாதமும் நீங்கள் அளிக்கும் பதில்களின் முக்கியத்துவத்தையும் நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் என்று நம்புகிறோம்.

## ROSA ஆராய்ச்சிச் சுருக்கங்கள்

ROSAவின் ஆராய்ச்சிச் சுருக்கங்கள், 'சிங்கப்பூர் லைஃப் பேனலின்' உறுப்பினராக நீங்கள் எங்களுக்கு வழங்கும் தரவுகளிலிருந்து உருவாக்கப்பட்ட எங்கள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை எடுத்துக்காட்டுகிற, ROSA குழுவால் எழுதப்பட்ட அறிக்கைகள் ஆகும். இந்த ஆராய்ச்சிச் சுருக்கங்கள் எங்கள் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளைத் தொடர்புடைய அமைச்சுகளில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பொது மக்களுடன் பகிர்ந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பத்திரிக்கைக் கட்டுரைகள் போன்ற கல்விசார் வெளியீடுகளுடன் ஒப்பிடுகையில், தற்போதைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதை எங்கள் ஆராய்ச்சிச் சுருக்கங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. 2020 முதல், மொத்தம் 16 ஆராய்ச்சிச் சுருக்கங்களைத் தயாரித்துள்ளோம். அவை எங்கள் இணையத்தளத்தில் பொதுவில் கிடைக்கின்றன, மேலும் அவை அமைச்சின் பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பகிரப்படுகின்றன.


இச்செய்திமடலில், மையத்தால் மார்ச் 2023இல் வெளியிடப்பட்ட இரண்டு ஆக அண்மைய ஆராய்ச்சிச் சுருக்கங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். ஆராய்ச்சிச் சுருக்கங்களின் திரட்டுகள் கீழே உள்ளன, மேலும் ஒவ்வொரு சுருக்கத்திற்குக் கீழேயும் உள்ள அந்தந்த QR குறியீடுகளை ஒளிவருடல் செய்வதன் மூலம் முழு ஆராய்ச்சிச் சுருக்கங்களையும் நீங்கள் அணுகலாம். இந்தச் சுருக்கங்கள் தற்போது ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன.

### 1. சிங்கப்பூரில் முதியோர்களிடையே நிலவும் வாழ்க்கைச் செலவு குறித்த கவலைகள்

இந்த அறிக்கையில், வேகமாக அதிகரித்து வரும் பணவீக்க விகிதம் உள்ளிட்ட பல காரணிகளால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு தொடர்பாக SLP உறுப்பினர்கள் கொண்டிருக்கும் கவலையின் அளவை நாங்கள் ஆராய்ந்தோம். ஆகஸ்ட் 2022இல், எதிர்மறையான நிதித் தாக்கங்களைச் சந்திப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பதிலாளர்களிடம் கேட்டோம், மேலும் அவர்கள் எவ்வகையான செலவுகளைப் பற்றி அதிகம் கவலைப்படுகிறார்கள் என்பதைக் கண்டறியவும் அதனைக் கேட்டோம். இந்த அறிக்கை உயர்மட்ட கண்டுபிடிப்புகளையும் வரவிருக்கும் மாதங்களில் எதிர்மறையான நிதி தாக்கத்தை அனுபவிக்கும் அபாயத்தை யார் அதிகம் பெறக்கூடும் என்பதற்கான குறிப்பையும் வழங்குகிறது, அதனுடன் அத்தகைய நபர்களுக்குத் தேவைப்படும் ஆதரவு வகைகளையும் வழங்குகிறது.

முழுச் சுருக்கத்தையும் அணுக நீங்கள் பின்வரும் QR குறியீட்டை ஒளிவருடல் செய்யலாம்:

படம் 2: வயதுக் குழுவின் அடிப்படையில் ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டத்துடன் இருக்கும்/இல்லாத பதிலாளர்களின் விகிதம்




உங்களிடம் ஓய்வுக்காலச் சேமிப்பு திட்டம் இருக்கிறதா அல்லது இல்லையா என்று கேட்டோம். மேலே உள்ள விளக்கப்படத்தில் பார்ப்பது போல, எங்கள் பதிலாளர்களில் பெரும்பாலோர் தங்களிடம் ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டம் இருப்பதாகக் கூறினர் அல்லது 58-72 வயதுக்குட்பட்ட பதிலாளர்களில் 70% பேர் 2023ஆம் ஆண்டில் ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கியுள்ளனர். வியப்பு என்னவெனில், குறைந்த அளவிலான 73-78 வயதுக்குட்பட்ட பதிலாளர்களே (62%) ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டத்தைக் கொண்டிருப்பதை நாங்கள் கவனிக்கிறோம். ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டத்தை உருவாக்க சிங்கப்பூரர்களை ஊக்குவிக்கும் முயற்சிகள், குறிப்பிட்ட வயதுக் குழுவில் உள்ள பதிலாளர்கள் பயனடையும் வகையில் சரியான நேரத்தில் தொடங்கப்படாமல் இருக்கலாம் என்பதே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இந்தக் கண்டுபிடிப்புகள், ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டத்தைக் கொண்டிருப்பது, மூப்படையும்போதும் ஓய்வுக்குப் பிறகும் நமது நிதிப் பாதுகாப்பில் ஏற்படுத்தக்கூடிய உண்மையான தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. வருங்காலத்துக்குத் திட்டமிடல் முக்கியமானது, மேலும் அதனைத் தொடங்குவதற்கு இஃது ஒருபோதும் தாமதமாகாது. எங்களிடம் பதிலளித்தவர்களில் பலர் ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கியிருந்தாலும், ஓய்வு வயதை எட்டாத நான்கில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கவில்லை என்பதை நாங்கள் கவனிக்கிறோம். தற்போது திட்டம் இல்லாதவர்களிடையே ஓய்வுக்காலத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வைத் தொடர்ந்து ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்தக் கண்டுபிடிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த வெளிச்சத்தில், நீங்கள் ஏற்கனவே அவ்வாறு செய்யவில்லை என்றால், முடிந்தவரை விரைவில் ஓய்வுக்காலத்துக்குத் திட்டமிடுவதைத் தொடங்க எங்கள் இளைய பதிலாளர்கள் அனைவரையும் ஊக்குவிக்க விரும்புகிறோம்!

## 2023ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரியில் நடைபெற்ற ‘சிங்கப்பூர் லைஃப் பேனல்’ சந்திப்பு அமர்வுகள்

2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து SLP, உறுப்பினர்ச் சந்திப்புகளை ஏற்பாடு செய்ததிலிருந்து, பங்கேற்பாளர்களிடமிருந்து நேர்மறையான கருத்துக்களையே பெற்றுள்ளோம். அண்மைய அமர்வுகளில் பங்குபெற்ற மற்றும் அர்த்தமுள்ள கருத்துக்களையும் அனுபவங்களையும் எங்களுடன் பகிர்ந்துகொண்ட அனைத்து SLP உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.







ஜனவரி 2023 (மேலே) மற்றும் பிப்ரவரி 2023 (கீழே) சந்திப்பு அமர்வுகளில் எங்களுடன் இணைந்த SLP உறுப்பினர்கள். எங்களுடன் இணைந்ததற்கு மிக்க நன்றி!

**2. சிங்கப்பூரில் வயதான பெரியவர்களின் சமூக நலன்**

சமூக நல்வாழ்வு என்பது வயதானவர்களின் அகச்சார்புடைய நல்வாழ்வின் முக்கியமான ஆனால் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்ட பரிமாணமாகும். நவம்பர் 2022இல் எங்கள் SLP உறுப்பினர்களுக்காக ‘கோரி எம். கீஸ் (Corey M. Keyes)’ உருவாக்கிய சமூக நல்வாழ்வு நடவடிக்கையைத் தழுவிய பதிப்பைப் பயன்படுத்தி, சிங்கப்பூரில் உள்ள முதியவர்களின் சமூக நலன் குறித்த கண்டுபிடிப்புகளை நாங்கள் வழங்குகிறோம், மேலும் சுற்றுப்புற வசதிகளின் கிடைக்கும் தன்மை, சமூக நடவடிக்கைப் பங்கேற்புகளுக்கு இடையேயான காலயிடைவெளி மற்றும் மனநலத்துடன் சமூக நலனுக்கிருக்கும் தொடர்பு போன்ற பல காரணிகளை ஆராய்கிறோம். இந்தக் கண்டுபிடிப்புகள் வயதானவர்களுக்கு மிகவும் ஆதரவு தேவைப்படும் சமூக நல்வாழ்வின் அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றன, மேலும் அவர்களின் சமூக நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான சாத்தியமான வழிகளைப் பரிந்துரைக்கின்றன.


முழுச் சுருக்கத்தையும் அணுக நீங்கள் பின்வரும் QR குறியீட்டை ஒளிவருடல் செய்யலாம்:

நாங்கள் முன்னர் வெளியிட்ட ஆராய்ச்சிச் சுருக்கங்களைப் பார்ப்பதற்காக, https://rosa.smu.edu.sg/resources/publications என்ற இணையப்பக்கத்தில் எங்களின் அனைத்து ஆராய்ச்சிச் சுருக்கங்களும் பதிவேற்றப்பட்டுள்ளன. வரவிருக்கும் செய்திமடல்களில் உங்களுடன் வெளியிடும் அடுத்தடுத்த ஆராய்ச்சிச் சுருக்கங்களை நாங்கள் தொடர்ந்து பகிர்ந்து கொள்வோம், எனவே அவற்றைக் கவனியுங்கள்!

## எங்கள் கருத்தாய்வுகளிலிருந்து பெற்ற கண்டுபிடிப்புகளின் சுருக்கம்

இச்செய்திமடலில், எங்கள் கருத்தாய்வுகளின் அண்மைய கண்டுபிடிப்புகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். ஜனவரி 2023இல், உங்களின் சேமிப்பு மற்றும் ஓய்வுக்காலத்திற்கான நிதித் தயார்நிலை குறித்து பல கேள்விகளைக் கேட்டோம். இது ROSA-வுக்கான, ஆராய்ச்சியின் முக்கியமான பகுதியாகும், ஏனெனில் ஓய்வுக்காலத்தில் நிதி அடிப்படையில் வலுவாக இருப்பது வெற்றிகரமாக மூப்படைவதற்கான ஒரு முக்கிய அம்சமாகும். இந்த ஆராய்ச்சியின் மூலம், ஓய்வுக்காலத்திற்கு நிதி அடிப்படையில் தயாராக இல்லாத முதியவர்களின் குழுக்களை அடையாளம் காண முயல்கிறோம்.

*படம் 1: எப்போதும்/பெரும்பாலான நேரம்/அரிதாகவோ அல்லது ஒருபோதும் இல்லை என்றோ, அவர்களுக்கு ஓய்வுக்காலத் திட்டம் இருக்கிறதா அல்லது இருந்ததா என்பதன் அடிப்படையில், தங்களுடைய செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தங்களின் வருமானம் போதுமானதாக இருப்பதாகக் கருதிய பதிலாளர்களின் விகிதம்*




பதிலாளர்கள் ஓய்வுக்காலச் செலவுக்கான திட்டத்தை வைத்திருந்தார்களா (ஆம், கிட்டத்தட்ட அல்லது இல்லை) என்பதன் அடிப்படையில், தங்களுடைய குடித்தன வருமானம் அவர்களின் செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருப்பதாக உணர்ந்த (எப்போதும், பெரும்பாலான நேரங்களில், அரிதாக/ஒருபோதும் இல்லை) 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பதிலாளர்களின் விகிதத்தை மேலே உள்ள புள்ளிவிவரங்கள் முன்வைக்கின்றன. இந்த முடிவுகள், ‘கிட்டத்தட்ட’ திட்டத்தைக் கொண்ட அல்லது ஓய்வுக்காலத் திட்டம் இல்லாத பங்கேற்பாளர்களுடன் ஒப்பிடும்போது, ஓய்வுக்காலச் சேமிப்பிற்காகத் திட்டமிட்டிருந்த SLP பங்கேற்பாளர்கள், தங்களுடைய செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களது சேமிப்புகள் எப்போதும் போதுமானதாக இருப்பதாக உணரும் வாய்ப்பு அதிகம் என்பதை விளக்குகிறது. இவ்வாறாக, ஓய்வுக்காலத் திட்டமிடல், ஓய்வுக்காலத்தில் உண்மையான நிதி நலனில் ஏற்படுத்தக்கூடிய விளைவின் முதனிலை ஆதாரங்களை இது வழங்குகிறது.

சந்திப்பு அமர்வுகளுக்கான அழைப்பிதழ்கள், சந்திப்பு அமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு உங்களை அழைக்க மின்னஞ்சல் மூலம் உருட்டல்முறை அடிப்படையில் அனுப்பப்படும். 'சிங்கப்பூர் லைஃப் பேனலில்' பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி இல்லாத, அமர்வுகளில் கலந்துகொள்ள விரும்புவோர், தயவு செய்து எங்கள் மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணான 6808 7910-ஐ அழைத்து உங்கள் ஆர்வத்தைப் பதிவு செய்யவும். எங்களின் வரவிருக்கும் அமர்வுகள் ஒன்றில் நீங்கள் கலந்துகொள்ள ஏற்பாடு செய்ய எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

## எங்களைத் தொடர்புகொள்ள

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வகையில் உதவி தேவையென்றால் அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ அல்லது கருத்துகளோ இருந்தால், தயவுசெய்து 6808 7910 என்ற எங்களுடைய நிலையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது slp@smu.edu.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துகளைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY